**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.287/2023**

2025–ம் வருடம் நவம்பர் திங்கள் 24–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: சத்தியவாணி** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 1 ஆம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 28.01.2023 ஆம் தேதியிட்ட கிருஷ்ணசாமி கவுண்டர் என்பவரின் இறப்பு சான்று புகைப்பட நகல் வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வம்சாவழி பட்டியல் அசல் வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.12.2022 ஆம் தேதியிட்ட இந்திராணி, விஜயமூர்த்தி மற்றும் பாப்பாத்தி ஆகியோர் சேர்ந்து 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் பதிவு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.12.2022 ஆம் தேதியிட்ட பொன்னம்மாள் என்பவர் 1 ஆம் பிரதிவாதிக்கு

எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரம் பதிவு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 04.10.2023 ஆம் தேதியிட்ட 1 ஆம் பிரதிவாதி தனக்காகவும், தனது இளவர் மகனுக்கும் சேர்த்து 4 ஆம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.24 17:06:18 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.